1969 மார்ச் 21]

திரு. நா. காசிராமன்: ஆன் எ பாயின்ட் ஆஃப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். நான் தடம் புரண்டு போகவில்லை. சூடாக நடந்தது விவாதம். இது அதைச் சற்று தணிக்கும் என்று நினைக்கிறேன்.

மருத்துவ வசதிக்கான செலவுகள் அதிகப்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் குறிப்பிட்டது "Directorate of Health Services and Family Planning"-ல் தொகை குறைக்கப் பட்டிருக்கிறது என்பதற்காக சில உதாரணங்களைக் கூறினேன். அப்படிக் குறிப்பிட்டதில் தவறு இல்லை. அடுத்தபடியாக, பேப்பரில் வருகிற சமாசாரங்களைப்பற்றிச் சொல்ல வேண்டாம் என்று சொன்னார்கள். தவறுகள் இருந்தால் அவற்றைத் திருத்திக் கொள்வதற்காகச் சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் சொன்னது, பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. அந்தச் செய்திகள் கூட உண்மையானவைதானா இல்லையா என்பதை ஆராய்ந்து வெளியிட முடியாத நிலையில் கூட வெளியிட்டிருப்பார்கள். மறுநாளே கூட திருத்தம் வரும். அடுத்த நாள் பத்திரிகையில் பார்த்தால் "காஞ்சி புரத்தில் இருந்து வந்த செய்தி தவறானது" என்று கூட வரும். மொத்தத்தில் பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாக வைத்து பேசக் கூடாது என்பதுதான் மரபு.

2. தன்னிலை விளக்கம்—தொடர்ச்சி.

(ஆ) தன் உரையில் குறிப்பிட்ட ஒரு கூற்றை திரு. அ. வெ. சுப்பிரமணியம் திரும்பப் பெறுதல்.

திரு. அ. வெ. சுப்பிரமணியம்: ஆன் எ பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். நான் பேசுகிறபோது பி.ஐ.எம்.க்கும், எம்.பி.பி.எஸ். க்கும் ஒரு காலகட்டம் என்று சொன்னேன். பி.ஐ.எம்.க்கு ஒரு வருடம் குறைவு என்று சொல்லியிருக்கிறார்கள். தவறுதலாகச் சொல்லிவிட்டேன். அதை வித்ட்ரா செய்துகொள்கிறேன். பி. ஐ. எம். கோர்ஸ் முடித்துவிட்டு ஹவுஸ் சர்ஜனாக வருகிறார்கள். அப்படி வரும்போது எம்.பி.பி.எஸ், படித்துவிட்டு வருகிறவர்களுக்கு ரூ. 150 ஸ்டைபண்ட்டும், இவர்களுக்கு ரூ. 100 என்றும் இருக்கிறது. அது ரூ. 150 என்று மாற்றியமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பரிசீலிக்கலாம்.

6. 1969–70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 14—மருத்துவம். வெட்டுத் தீர்மானங்கள்.

திரு. க. இராமமூர்த்தி, திரு. வி. கே. கோதண்டராமன், திரு. கே. என். குமாரசாமி ஆகியோர் இருக்கையில் இல்லையாதலால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பட்டனவாகக் கருதப்படும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஆ. கு. சுப்பையா இவர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் படுகின்றன.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,67,46,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மானியக் கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்.

திரு. கே. என். குமாரசாமி, திரு. ஆர். கருப்பையா, திரு. சி. கோவிந்தராசன் ஆகியோர் இருக்கையில் இல்லையாதலால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பட்டனவாகக் கருதப்படும்.

திரு. கே. எஸ். கோதண்டராமையா அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

பேரவை முன் உள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,95,04,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மானியக் கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு.

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

பேரவையின் முன் உள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 51,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள்
பிற்பகல் 3·56 இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and orders.

Nil.

B.—Reports, notifications and other papers.

* 97. Special Water-Supply and Drainage Schemes 1969–70 (English and Tamil).

† 98. Speech by Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance on Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties Administration (English and Tamil).

‡ 99. Policy note under Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading (English and Tamil).

---

* Despatched to Members on 19—3—1969.
† Despatched to Members on 20—3—1969.
‡ Placed on the Table of the House on 20—3—1969.

TRUTH ALONE TRIUMPHS